## வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனி – 2015/2016

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

-----------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தில், வரையறுக்கப்பட்ட சீ.டபிள்யூ.ஈ எக்கனமிக் சென்றர்ஸ் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் :

- கணக்காய்விற்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியானது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.1.2 கம்பனியின் ஒருங்கிணைப்பு

கம்பனியின் ஸ்தாபிப்பு தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரம் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாடு – 28 ஆம் பிரிவு

பனிக்கொடைக்கான ஏற்பாடுகளினைக் கணிப்பிடுகையில், பனிக்கொடையினை கோருவதற்கு தகுதியானவர் யார் என்று அவர்களின் ஓய்வூதியம் வழங்கும் போது அனைத்து ஊழியர்களையும் கம்பனி கருத்திற்கொண்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே காட்டப்பட்டுள்ள பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | முன்னைய ஆண்டு சரிப்படுத்தல் | 2,031,740 | பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் |
| (ஆ) | வாடகைச் செலவு | 1,476,842 | வாடகை உடன்படிக்கை |
| (இ) | வாடகை முற்பணத்தின் பெறுகைகள், மீளளிக்கக்கூடிய பாதுகாப்பு வைப்புப் போன்ற பொறுப்புக்கள் மற்றும் கணனி உபகரணங்கள் மற்றும் தூய்மைப்படுத்தும் சேவைகள் மீதான செலுத்தவேண்டியவைகள் | 1,529,971 | தகவல்களின் விபரம் மற்றும் வயதுப் பகுப்பாய்வு |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

ஐந்து அறக்கட்டளைகள் மற்றும் வியாபாரக் கடன்பட்டோர்களிடமிருந்து முறையே 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 02 வருடங்களுக்கு மேற்பட்டதாக அறவிடப்படாது தொடர்ந்தும் காணப்படுகின்ற ரூபா 1,076,539 மற்றும் ரூபா 3,982,956 தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைங் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2016 இன் 22 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச்சட்டம் | மீளாய்வாண்டிற்கான ரூபா 252,138 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினை பொறுப்பாகவுள்ள காலப்பகுதிக்குள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சரியாக செலுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | 2014 இன் 07 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | பெறுமதி சேர் வரி ரூபா 1,414,496 தொகையினை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 7,817,522 மிகையொன்றுடன் ஒப்பிடுகையில் ரூபா 2,676,180 மிகையொன்றாகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 5,141,342 ஆன பற்றாக்குறையொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. நிர்வாக செலவினங்கள் ரூபா 4,966,898 இனால் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாக காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 6,215,839 ஆகக் காணப்பட்ட மிகைகள் 2016 ஆம் ஆண்டில் தலம்பல்களுடன் ரூபா 2,676,180 இற்கு குறைவடைந்திருந்தது. ஊழியர்களின் ஊதியம், பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான வரி என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர், கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை 2016 ஆம் ஆண்டில் ரூபா 158,571,655 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டில் அது ரூபா 164,534,897 ஆகக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2. செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், கம்பனியின் செயலாற்றலினை கணக்காய்வில் மதிப்பிடமுடியாதிருந்தது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அரச நிதிப்பிரமாணத்தின் 133 மற்றும் 134 ஆம் நிதிப்பிரமாணங்களின் உறுப்புரைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கு/ சொத்துக்களினை மெய்மையாய்வு செய்வதற்குத் தவறியமை. |
| (ஆ) கணக்கீடு | நியதிச்சட்ட கொடுப்பனவுகளினை தீர்ப்பதற்கு காசு அடிப்படையினை பின்பற்றியமை. |
| (இ) வருமானங்கள் மற்றும் செலவினங்கள் மீதான கட்டுப்பாடு | செலவினங்களினைக் கட்டுப்படுத்துவதற்கு மற்றும் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |